# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>

**முன்னிலை:- திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.
திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் கார்த்திகை திங்கள் 29-ம் நாள்
2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

இடைநிலை மனு எண்.3/2024
இன்
அசல் வழக்கு எண்.24/2024
(CNR.No.TNTR21-000033-2024)
...

G. வெங்கடேசன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பெரியசாமி
2. வேலாயுதம்
3. பாக்கியம் (எ) காஞ்சனா
4. பவித்குமார்
4. மணிகண்டன்
6. பாபு ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 30.10.2024 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P.M.நரசிம்மன், S.ராஜேஷ், ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் B.M. கோகுல் ராவ் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் M.பாஸ்கர் அவர்கள் முன்னிலையாகியும், உரிய வாய்ப்பு அளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யாததால் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் ஒருதரப்பாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## <u>உத்தரவு</u>

நீதிமன்ற ஆணையர், வட்டார நில அளவையர் உதவியுடன் வழக்கு சொத்தினை பார்வையிட்டு, அதன் இயற்கை அமைவிடம், பாத்திய அனுபவம் குறித்து மாதிரி வரைபடம் வரைந்து அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுவின் சுருக்கம்:-</u>**

(அ) தாவா 'A' அட்டவணைச் சொத்து ராமசாமி பிள்ளைக்கு பூர்வீக பாத்தியப்பட்டது. ராமசாமி பிள்ளை இறந்த பின்பு அவர் வாரிசுகளான ஜெயராமன், தாமோதரன், ராமநாதன், பத்மநாபன், கௌரி, குணசேகரன் ஆகியோர்கள்

அடைந்து அனுபவித்து வந்து, மேற்படி 6 பேர்கள் புல எண்.370/10ல் 80 செண்டை பெரியசாமி என்பவருக்கு 31.08.1989ம் தேதியிட்டு கிரையம் செய்துள்ளனர். மேற்படி 6 நபர்கள் மேலும் 20 செண்டை 31.08.1989ம் தேதியிட்டு நடராஜன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளனர். நடராஜன் மேற்படி 20 செண்டை பெரியசாமிக்கு 29.07.1998ல் கிரையம் கொடுத்துள்ளார்.

(ஆ) மனுதாரர் 1.00 ஏர்ஸ் நிலத்தில் 35 செண்ட் நிலத்தை பெரியசாமி மற்றும் வேலாயுதம் ஆகியோர்களிடமிருந்து 25.09.2000ம் தேதியிட்டு கிரையம் வாங்கி, பயிர் விவசாயம் செய்து, மனுதாரர் பெயருக்கு புல எண்.370/10B என உட்பிரிவு செய்யப்பட்டு அனுபவித்து வருகிறார். 'A' அட்டவணைச் சொத்தின் மாதிரி வரைபடம் 'ABCDEFGA' காட்டியுள்ளார். 'A' அட்டவணைச் சொத்துக்கு அருகில் பிரதிவாதிகளுக்கு நிலம் உள்ளது. பிரதிவாதிகள், மனுதாரர் இல்லாதபோது 15.03.2024ல் 'B' அட்டவணைச் சொத்தில் அத்துமீற முயற்சித்தார்கள். அது மாதிரி வரைபடத்தில் 'ABFGA' என 'B' அட்டவணைச் சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

(இ) வழக்கு சொத்துக்கு மனுதாரர் பெயரில் பட்டா ஏற்பட்டு வரி செலுத்தி அனுபவித்து வருகிறார். எதிர்மனுதாரர்களுக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையோ பாத்தியமோ இல்லை. மனுதாரரின் அமைதியான அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்கிறார்கள். எனவே வாதி விளம்புகை பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தால்தான் உண்மை நிலை தெரிய வரும். எனவே இம்மனு நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு உரிய வாய்ப்பு அளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யாததால், அவர்கள் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளனர்.

3. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:–</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. <u>தீர்வு:–</u>

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை பரிகாரம் அதன் தொடர்ச்சியாக உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு சொத்தை, மனுதாரர், பெரியசாமி மற்றும் வேலாயுதம் ஆகியோர்களிடமிருந்து 25.09.2000ம் தேதியிட்டு கிரையம் வாங்கி அனுபவித்து வருவதாகவும், வழக்கு சொத்திற்கு மனுதாரர் பெயரில் பட்டா ஏற்பட்டு வரி செலுத்தி வருவதாகவும், எதிர்மனுதாரர்கள், மனுதாரர் இல்லாத சமயம் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததாகவும், எதிர்மனுதாரர்களுக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையோ பாத்தியமோ இல்லை என்றும், எனவே, அதைப் பொறுத்து நீதிமன்றத்திற்கு நிரூபணம் செய்ய ஆணையர் நியமனம் அவசியம் என்றும் மனுவை அனுமதிக்க கோரி வாதிடப்பட்டது.

5. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது அசல்

வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிப்பதால் நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியம் என்ற மனுதாரரின் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வழக்கறிஞர் திருமதி S.V. சந்தியா அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் கட்டணமான ரூ.5,000/– ஐ, நீதிமன்ற ஆணையருக்கு இவ்வுத்தரவு தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் மனுதாரர் நேரடியாக செலுத்த வேண்டும். நீதிமன்ற ஆணையர் இருதரப்பிற்கும் அறிவிப்பு கொடுத்து வட்ட நில அளவையர் உதவியுடன் 'A','B' அட்டவணைச் சொத்துக்களை பார்வையிட்டு, அதன் இயற்கை அமைவிடம், அடிஅளவுகள் குறித்து மாதிரி வரைபடம் வரைந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. அழைக்க நாள் 13.12.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/- R.D. Gurulakshmi
15.11.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

Sd/- R.D. Gurulakshmi
15.11.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.